செ.வெ.எண்: 790 **பத்திரிக்கைச் செய்தி** நாள்: 06.12.2007

மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் இன்று (06.12.2007) தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 630 மெ.வா. மின் உற்பத்தி திறன் கொண்ட வடசென்னை அனல்மின் நிலையத்தை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அவ்வாய்வின்போது தனது உதவியாளர் திரு. இரா.இளங்கோவன் உடனிருந்தார். இம்மின் நிலையத்தின் இயந்திரங்களின் செயல்பாடுகளையும், கட்டுப்பாட்டு அறையினையும், அனல் மின் நிலையத்தின் மொத்த உற்பத்தி திறனான 630 மெகாவாட்டுக்கு மேலும் கூடுதலாக மின் உற்பத்தி செய்வதையும் பார்வையிட்டார். வடசென்னை அனல் மின் நிலைய தலைமைப் பொறியாளர் மற்றும் மேற்பார்வைப் பொறியாளர்களுடன் அனல் மின் நிலைய செயல்பாடுகள் குறித்து கலந்துரையாடினார்.

வடசென்னை அனல் மின் நிலையம் 2006–07 ஆம் ஆண்டில் மிக அதிகமாக 49,044 இலட்ச யூனிட்கள் உற்பத்தி செய்து உற்பத்தி காரணியான 88.87% அடைந்ததை பாராட்டினார். இது அனைத்து இந்திய சராசரி மின் அளவான 82.43% விட மிக அதிகமாகும். இந்த வருடமும் மின்உற்பத்தி அந்த அளவை எட்டிவிட முயற்சிகள் மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இம்மின் நிலையம் கடந்த வருடங்களில் உச்ச நேர மின் உற்பத்தி மற்றும் குறைந்த பட்ச எரி எண்ணெய் நுகர்விற்காக 1998–99 முதல் 2006–07 வரை தொடர்ந்து எட்டு ஆண்டுகளும் விருதுகள் மற்றும் ரொக்கப் பரிசுகள் பெற்றமைக்கு பாராட்டுதல் தெரிவித்தார்.

மேலும், மின் உற்பத்திக்கு தேவைபான எரிபொருள் நிலக்கரி, எரி எண்ணெய் மற்றும் உதிரி உபகரணங்கள் ஆகியவை போதுமான அளவு இருப்பு பற்றி கேட்டு உறுதிபடுத்திக் கொண்டார். வரும் கோடைகாலத்திலும் தற்பொழுது உள்ள உற்பத்தி திறன் 630 மெகாவாட்டுக்கு குறையா வண்ணம் மின் உற்பத்தி செய்யவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார் என வடசென்னை அனல் மின் நிலைய தலைமைப் பொறியாளர் திரு. சா.ராஜேந்திரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9